# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2048 • ஆகஸ்ட் 19, 2017 Weekly E-paper • August 19, 2017


# மோடி பேசுகிறார்... எடப்பாடி வாயசைக்கிறார்!



● சுப.வீரபாண்டியன்

எட்டு மாதங்களுக்கு முன்னால் இறந்துபோன தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணம் குறித்த 'மர்மத்தை' அறிவதற்காக, இன்றைய முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, ஒரு நபர் விசாரணைக் குழு ஒன்றை அமைத்துள்ளார்.

"எங்களின் கோரிக்கை நிறைவேறிவிட்டது, இனிமேல் இரு அணிகளின் இணைப்புப் பேச்சு வார்த்தைக்குத் தடையில்லை" என்கிறார். ஓ.பி.எஸ் அணியின் இயக்குனர்களில் ஒருவரும், முன்னாள் அமைச்சருமான மாபா பாண்டியராஜன்.

உண்மையில் எடப்பாடியும், பாண்டிய ராஜனும் வாயசைக்கின்றனர். பின்னாலிருந்து மோடிதான் பேசுகின்றார். கதை, உரையாடல், இயக்கம் எல்லாம் பா.ஜ.க.தான்!

'பாய்ஸ் கம்பெனி' வைத்து நாடகம் நடித்துக் கொண்டிருப்பவர்கள் இங்குள்ள அ.தி.மு.க.வினர். இந்த மேடையில் அந்த நாடகம் இன்னும் எத்தனை நாளென்று தெரியவில்லை.

தினகரன், சசிகலா குழுவினரையும், அவர்கள் குடும்பத்தினரையும் கழற்றி விட்டு விட்டு, ஓ.பி.எஸ் – ஈ.பி.எஸ். அணிகளை ஒன்றாக இணைத்து, இரட்டை இலைச் சின்னத்தை அவர்களுக்கு வாங்கிக் கொடுத்தபின், அடுத்த தேர்தலில் அ.தி.மு.க.வைத் தங்களுக்குள் 'அடக்கமாக' வைத்துக் கொள்வது, பா.ஜ.க.வின் திட்டம்.

பதுக்கி வைத்துள்ள பணத்தையும், பதவியையும் கட்டிப்பிடித்துக் காப்பாற்றிக் கொள்வது, பாய்ஸ் கம்பெனி நாடக நடிகர்களின் நோக்கம். இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்கான எண்ணத்தில்தான் இந்த விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

விசாரணைக் குழுவிற்கு எந்த அதிகாரமும் கிடையாது. பரிந்துரை மட்டுமே செய்ய முடியும். அந்தப் பரிந்துரையையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் தேவையில்லை. உண்மையாகவே விசாரணை நடத்த விரும்பி இருந்தால், அதனை 6 மாதங்களுக்கு முன்பே நடத்தியிருக்க வேண்டும். சி.பி.ஐ. விசாரணைக்கு உட்படுத்தியிருக்க வேண்டும். புதைக்கப்பட்ட உடலைத் தோண்டி எடுத்து ஆய்வுகள் செய்திருந்தால் உண்மைகள் வெளிவந்திருக்கும்.

காலம் கடந்து, ஓய்வு பெற்ற நீதிபதியின் கீழ் விசாரணை என்பது வெறும் கண்துடைப்பே அன்றி வேறொன்றும் இல்லை. என்ன செய்வது, மோடி பேசுவதற்கு வாயசைக்க வேண்டும் என்பதுதானே எடப்பாடிக்கு இடப்பட்டிருக்கும் கட்டளை! ●

---


சுப.வீரபாண்டியனின்

நான்கு நூல்கள் வெளியீட்டு விழா

தலைமை
ஆ.இராசா
(கொள்கை பரப்புச் செயலாளர், தி.மு.க)

நூல்களை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றுவோர்
தோழர் சி.மகேந்திரன்
(இந்தியப் பொதுவுடைமைக் கட்சி)
எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன்
கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன்
பேராசிரியர் ஹாஜா கனி

• 19.08.2017 • சனிக்கிழமை மாலை 6 மணி

ராஜரத்தினம் கலையரங்கம், முத்தமிழ் மன்றம், (பழைய சத்யா ஸ்டூடியோ எதிரில்), அடையாறு, சென்னை-20

அனைவரும் வருக!

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

# மாடுகள் வாழட்டும், மனிதர்கள் சாகட்டும்!




நன்றி: **ஆனந்த விகடன்**

**இ**ந்தியா ஒரு விந்தையான நாடு. இங்கே பசு மாடுகளுக்கு ஆம்புலன்சு இருக்கிறது. ஆனால் பச்சைக் குழந்தைகளுக்கு ஆக்ஸிஜன் இல்லை. 70க்கும் மேற்பட்ட குழந்தைகளின் பிணங்களுக்கு நடுவேதான் இந்த ஆண்டு, ஆகஸ்ட் 15 அன்று, இந்திய விடுதலைக் கொடி ஏற்றப்பட்டிருக்கிறது.

உ.பி.மாநிலம், கோரக்பூர் மாவட்டம், பி.டி.பி. மருத்துவமனையில், ஆகஸ்ட் 7-11 தேதிகளில், கொத்துக்கொத்தாகக் குழந்தைகள் ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் இறந்துபோய் இருக்கிறார்கள். ஆக்ஸிஜன் சிலிண்டர் வழங்கும் நிறுவனம் பல முறை நினைவூட்டல் கடிதங்களை அந்த மருத்துவமனைக்கு அனுப்பி இருக்கிறது. 63 இலட்சம் ரூபாய் நிலுவையில் உள்ளது என்றும், அதனை உடனே அனுப்பி வைக்காவிட்டால், சிலிண்டர் வழங்குவதை நிறுத்திவிடுவோம் என்றும் எச்சரித்துள்ளது. ஒவ்வொரு முறை கடிதம் அனுப்பும் போதும், அதன் நகலை, உ.பி.மாநில அரசின் சுகாதாரத்துறை அமைச்சகத்திற்கும் அனுப்பி உள்ளது.

இத்தனைக்குப் பிறகும், நிலுவைத் தொகையை அந்த நிறுவனத்திற்கு மருத்துவமனை அனுப்பவில்லை அதன் விளைவாகவே இத்தனை குழந்தைகள் இப்போது உயிர் இழந்துள்ளனர். இதுகுறித்துக் கவலை கொள்ளாத உ.பி.முதல்வர் யோகி ஆதித்யா நாத், பசுக்களைப் பாதுகாக்கும் கோ சாலைகளுக்கு 4000 கோடி ரூபாயை ஒதுக்கி உள்ளார்.

சரி, இந்தியாவில் மாடுகள் வாழட்டும், மனிதர்கள் சாகட்டும்!

# பேரவையின் பொதுக்குழுக் கூட்டம்

**ஆ**ண்டுதோறும் நடைபெறும் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுக்குழுக் கூட்டம், இவ்வாண்டு, 20.8.2017 அன்று, காலை 10 மணிக்கு, சென்னை, கொளத்தூரில் நடைபெற உள்ளது. உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொடர்புக்கு
அ.இல.சிந்தா
+91 98844 85830

**சுப.வீரபாண்டியன்**
பொதுச் செயலாளர்

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஏற்க முடியாத கருத்து

**கொ**டுமை, கொடுமை என்று கோயிலுக்குப் போனால், அங்கோர் கொடுமை தலைவிரித்து ஆடிக்கொண்டிருந்ததாம் - சொல்வார்கள் கிராமங்களில்.

மத்திய அரசும், உச்ச நீதிமன்றமும் இந்தப் பழமொழியைத் தான் நினைவு படுத்துகின்றனர்.

தமிழகத்திற்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாத வகையில், காவிரியின் குறுக்கே கர்நாடகா புதிய அணை கட்டிக்கொள்ளலாம் என்று கருத்து தெரிவித்துள்ளது உச்ச நீதிமன்றம், இரண்டு நாள்களுக்கு முன்னால்.

இந்தக் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் 'ஆமாஞ்சாமி' போட்டிருக்கிறார் தமிழக வழக்கறிஞர் சேகர் நாப்டே. இது பெரிய கொடுமை.

2007ஆம் ஆண்டு காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின் படி, தமிழகத்திற்குக் கர்நாடகா 192 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டும்.

ஆனால் கர்நாடகா அப்படிச் செய்யவில்லை.

காவிரியின் உபரி நீரை வழங்குவதோடு, பெரும்பாலான காலங்களில் நீரை வழங்குவதே இல்லை.

வறண்ட நிலமாகிப் போன காவிரி டெல்டா விவசாயப் பெருங்குடி மக்கள் தமிழக அரசையும், மத்திய அரசையும், நீதிமன்றத்தையும் நாடிநாடி ஓய்ந்து போனார்கள்.

மத்திய மாநில அரசுகள் கிஞ்சித்தும் இவர்களைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. தமிழக அரசு பசப்பு வார்த்தைகளை மட்டும் அவ்வப்போது சொல்லிக்கொண்டு இருக்கிறது.

உச்ச நீதிமன்ற ஆணை, காவிரி நடுவர் நீதிமன்ற ஆணை இவைகளுக்கு கர்நாடகா அரசு கட்டுப்படுவதே இல்லை.

இன்று விவசாயிகள் தலைநகர் டெல்லியில் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள் பரிதாபமாக, ஆனால் விடாமுயற்சியோடு.

இந்நிலையில் காவிரியின் குறுக்கே இன்னொரு அணை கட்ட அனுமதி அளிக்க முயல்கிறதோ நீதிமன்றம் என்ற ஐயம் ஏற்படுகிறது.

இதுவரை அளித்த நீதிமன்ற ஆணைகளைக் காற்றில் பறக்கவிட்டு மதிக்காத கர்நாடகா அரசு இனியும் மதிக்குமா?

தமிழகத்திற்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாத வண்ணம், கர்நாடகக் காவிரியில் அணை கட்டலாம் என்பது எப்படி நியாயமாகும்.

தமிழகத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்துவதே கர்நாடகம் தானே.

அது மீண்டும் ஓர் அணை கட்டினால், அது தமிழகத்திற்கு இன்னொரு பெரிய ஆபத்தையும், துயரத்தையும் ஏற்படுத்தும்.

தெளிவாகச் சொன்னால் காவிரி டெல்டா மாவட்டங்கள் தமிழகத்தின் 'சகாரா' பாலைவனமாக ஆகிவிடும்.

இனி வரும் தீர்ப்பு, இரு மாநிலங்களும் பாதிக்காத வகையில், தமிழகத்தின் உரிமை நிலைபெறும் வகையில் நதிநீர் தீர்வு இருக்கவேண்டும்.

தற்போது நீதிமன்றம் கூறிய கருத்து தமிழகத்தால் ஏற்கக் கூடியதாக இல்லை.

சமன் செய்து சீர்தூக்கி ஒரு பக்கம் சாயாமல் கருத்தும், தீர்ப்பும் அளிக்க வேண்டிய பொறுப்பு நீதிமன்றத்தின் கடமையாகும்.



# ‘தாமரை’யின் கனவைத் தகர்த்தெறிவோம்

● எழில்.இளங்கோவன்

பாரதிய ஜனதாகட்சியை அவ்வளவு எளிதாக நினைத்துவிடக் கூடாது. அது நாசிசத்தின் நகல். பாசிசத்தின் மறுவடிவம், அதன் தாய்வீடு இந்துமகாசபை.

**அகிலபாரதிய இந்துமகாசபா**

1906ஆம் ஆண்டு ‘முஸ்லீம் லீக்’ என்ற அமைப்பு தொடங்கப்பட்டது. அதைக் காரணம் காட்டி 1915ஆம் ஆண்டு அமிர்தசரசில் மதன்மோகன் மாளாவியா, லாலா லஜபதிராய் ஆகியோர் தலைமையில் 'அகில பாரதிய இந்து மகா சபா' என்ற அமைப்பை உருவாக்கினார்கள் பார்ப்பனர்கள். 1920ஆம் ஆண்டு விநாயக் தாமோதர் சாவர்க்கார் இதன் தலைவர் ஆனார்.

இந்தச் சபையின் கொள்கையை ஒரே வரியில் சொன்னால் அது ‘இந்து’ தேசியவாதம். இந்து என்ற இச்சொல்லில் பார்ப்பனியமும், இந்து ராஷ்டிரமும் ஒளிந்துகொண்டு இருக்கிறது. இதற்கு அச்சபையின் அதிகாரப் பூர்வபெயர் ‘ஒருங்கிணைந்த மனிதநேயம்’.

அதென்ன, மனிதநேயத்தில் ஒருங்கிணைந்த, ஒருங்கிணையாத மனிதநேயம்?

1949ஆம் ஆண்டு டிசம்பர் 22 மற்றும் 23 ஆம் தேதிகளில் நள்ளிரவில், அயோத்தி பாபர் மசூதிக்குள் நுழைந்து கள்ளத் தனமாக பாலராமன் சிலையை வைத்தது இந்துமகாசபா. இதற்கு உடந்தையாக இருந்தவர் அம்மாவட்ட ஆட்சித்தலைவர் கே.கே.நாயர்.

இதற்குப் பரிசாக 1967ஆம் ஆண்டு கே.கே. நாயர், ஜனசங்கம் கட்சியால் நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கப்பட்டார். இதை ‘வேலைக்கேற்ற கூலி’ என்பார் அருணன்.

இதுதான் (இந்து-முஸ்லீம் இடையேயான) இவர்கள் சொல்லும் ஒருங்கிணைந்த மனிதநேயமோ! மத மோதலுக்கான இந்து மகாசபையின் கருவிகளுள் இது முக்கியமான ஒன்று.

அடுத்து இந்து மகா சபையினால் உருவாக்கப் பெற்ற இன்னொரு பார்ப்பனிய வலது சாரித் தீவிரவாத அமைப்பு ராஷ்டிரிய சுயம் சேவக் சங்.

**ராஷ்டிரிய சுயம் சேவக் சங்**

ஆர்.எஸ்.எஸ். என்று மூன்றெழுத்துகளால் அழைக்கப்படும் இந்தச் சங்கத்தை 1925 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 ஆம் நாள் உருவாக்கினார் கேசவ் பாலிராம் ஹெக்டேவர். இவர் இந்துமகாசபையில் பயிற்சிபெற்றவர். 1940 முதல் 1973 வரைமகாதேவ் சதாசிவ கோல்வால்கர் இதன் தலைவராக இருந்துள்ளார்.

இந்த அமைப்பின் கொள்கை இந்துத்துவம். இதற்குள் பார்ப்பனியத்தின் அனைத்து நலன்களும் அடங்கும். வர்ணாசிரமம் உட்பட. ஆனால் இந்த அமைப்பும் சொன்னது ஒருங்கிணைந்த மனிதநேயம் என்று. இதோ அதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்கு



ஜவகர்லால் நேரு, முகமதலி ஜின்னா இருவரும் ஒருமித்த கருத்தில் இருக்கிறார்கள். நவகாளி இந்து-முஸ்லீம் கலவரத்தை ஒட்டி மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி முஸ்லீம்களுக்கு ஆதரவாகப் பேசுகிறார்.

இந்த காரணத்தை முன் வைத்து 1948ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் நாள் காந்தியைச் சுட்டு கொன்றான் நாதுராம் கோட்சே. இவன் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தீவிரஉறுப்பினன். ஆர்.எஸ்.எஸ்ஐ இந்திய அரசு தடை செய்தது.

இதற்கான விளக்கத்தை 1948 பிப்ரவரி 4 ஆம் நாள் இந்திய அரசு அறிக்கையாக தந்ததை இணையதளம் இப்படிக் கூறுகிறது :

“ஆர்.எஸ்.எஸ். இந்துக்களிடையே ஒற்றுமையை வளர்ப்பதுதான் தங்கள் நோக்கம் என்று கூறுகிறது. நடைமுறையில் அப்படியில்லாமல் விரும்பத்தகாத பயங்காரவாத நடவடிக்கைகளில் அதன் உறுப்பினர்கள் ஈடுபட்டு உள்ளனர். பொதுச் சொத்துக்களுக்குத் தீயிடல்,சேதப்படுத்தல், கொள்ளையிடல் போன்றசம்பவங்களில் தொடர்பு இருப்பது தெரியவருகிறது” என்று ஆர்.எஸ்.எஸ்ஐ ஒருபயங்கரவாத அமைப்பாகவே அவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இதுதான் இந்துத்துவாவின் ஒருங்கிணைந்தமனிதநேயம். எப்படி இருக்கிறது?

இந்தியா இந்து நாடு, ராமராஷ்ட்ரம். அதை அடைய அதிகாரம் தேவை. அரசியல் அதிகாரத்தை நோக்கி ஆர்.எஸ்.எஸ். அமைப்பால் உருவாக்கப்பட்ட அரசியல் கட்சி ஜனசங்கம்.

**பாரதிய ஜனசங்**

1951 அக்டோபர் 21 ஆம் நாள் சியாமாபிரசாத் முகர்ஜியால், ஆர்.எஸ்.எஸ். பின்புலத்தில் உருவாக்கப்பட்ட அரசியல் கட்சி பாரதிய ஜனசங். சியாமாபிரசாத் முகர்ஜி 3 ஆண்டுகள் நேருவின் அமைச்சரவையில் இருந்தவர். இவர் ஆர்.எஸ்.எஸ்.சின் தயாரிப்பு என்று ‘ஜனசங்கம்’வரலாற்றை எழுதிய கிரைக் பாக்ஸ்டர் கூறுகிறார். இவர்தான் அடல்விகாரி வாஜ்பேயி, லால்கிஷன் அத்வானி ஆகிய இருவருக்கும் குருநாதர்.

சரி! ஜனசங்கத்தின் கொள்கை என்ன? அதுவே சொல்கிறது “பாரதிய சான்ஸ்கிருதி, மர்யாதா (பார்ப்பனிய தர்மசாஸ்திரங்களின் படி) இந்தியாவைஅரசியல் பொருளாதாரஅடிப்படையில் மாற்றுவது.”அப்பட்டமான வர்ணாசிரமம்.

அக்கட்சியின் உறுப்பினர் படிவத்தின் பின்புறத்தில் “ஒற்றை ஆட்சி முறையை உருவாக்குதல், அகண்ட பாரதத்தை அமைத்தல், பசு பாதுகாப்பு மற்றும் வளர்ப்பு” என்று அதன் இலட்சியப் பாதையைப் பதிவு செய்கிறது.

1952 ஆம் ஆண்டிற்கானஅதன் தேர்தல் அறிக்கையில் “ஒரேநாடு”-“ஒரேதேசம்”-“ஒரே கலாச்சாரம்”-“பாரத்வர்ஷம்”என்றபிரகடனம் ஜனசங்கத்தின் முகத்திரையைக் கிழித்துவிடுகிறது.

தமிழ் போன்ற இந்திய மொழிகள் தேவநாகிரி, சமஸ்கிருதம் ஆகியவற்றின் வரி, ஒலி வடிவத்தையும், சொல்லாட்சியையும் ஏற்கவேண்டும். இல்லையேல் பிறமொழித் தேசிய இனங்கள் மீது ஒடுக்குமுறைதான் என்பதை“அகில இந்திய மொழியாக மிகவிரைவில் இந்தி ஏற்கப்படச் செய்யக்கட்சி உழைக்கும்”என்ற ஜனசங்கத்தின் அறிக்கை, இன்றையபா.ஜ.க. ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

1977 ஆம் ஆண்டுபொதுத் தேர்தலில் நிறுவனகாங்கிரஸ், பாரதிய லோக் தளம், சோசலிஸ்ட் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து ‘ஜனதா கட்சி’யாகப் போட்டியிட்டது ஜனசங்கம். வெற்றி பெற்ற ஜனதாகட்சியின் பிரதமராக மொரார்ஜி தேசாய் பதவி ஏற்றார். ஜனசங்கத்தின் சார்பில் அந்த அமைச்சரவையில் வெளியுறவுத் துறைஅமைச்சராக வாஜ் பேயியும், செய்தி ஒலிபரப்பு அமைச்சராக அத்வானியும் பதவி ஏற்றார்கள். பின்னர் ஜனதாகட்சி உடைந்தது. ஜனசங்கம் தடுமாறியது. ஜனசங்கத்தில் இருந்து பாரதிய ஜனதா கட்சி உருவானது.

**பாரதிய ஜனதாகட்சி**

1980ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வாஜ்பேயி தலைமையில் அமைக்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ்சின் இரண்டாவது அரசியல் கட்சிபாரதிய ஜனதா கட்சி.

இக்கட்சியின் உயர்மட்டத் தலைமை ஆர்.எஸ்.எஸ். பின்புலத்தில் வந்த பார்ப்பனவாதிகளிடம் இருக்கும். கீழ்மட்டத் தலைமையும், தொண்டர்களும்தான் ஆர்.எஸ். எஸ். அல்லாத இந்துக்களிடம் இருக்கும்.

இந்துமகாசபை, ஆர்.எஸ்.எஸ்., பாரதிய ஜனசங்கம் இவ்வமைப்புகளின் வழியாக வந்த பார்ப்பனிய இந்துத்துவக் கொள்கைகள் பா.ஜ.க.விடம் மதவாதமாகவும், சாதியவாதமாகவும் வெறிகொண்ட கொள்கையாக மாறிவிட்டன.

ஒருங்கிணைந்த மனிதநேயம் பேசியவர்கள் 1992 ஆம் ஆண்டு அயோத்தியில், முதல்வர் கல்யாண்சிங் தயவுடன் பாபர் மசூதியை டிசம்பர் 6ம் நாள் இடித்துத் தரைமட்டம் ஆக்கினார்கள்.

இதுகுறித்து லிபரான் குழுவிடம் மன்மோகன்சிங் அளித்த அறிக்கையில், பாபர் மசூதி இடிப்புக்கு முக்கியக் காரணமானவர்கள்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்...

# மதுரைக்கு வழி கையில் இருக்கிறது

● சிவதி

ஒரு மாலைப்பொழுது நண்பருடன் கோட்டூர் புரத்தில் இருந்து சென்னை எழும்பூர் தொடரி நிலையத்திற்குச் செல்லவேண்டும். நண்பர்தான் வாகனத்தைச் செலுத்தினார். அவர் வழக்கமாகச் செல்லும் சாலை வழித்தடத்தில் வண்டியைச் செலுத்தினார். நான் வலது இடது என மாற்று வழித்தடத்தினை பரிந்துரைத்தேன். நண்பர் நினைத்ததை விடவும் பத்து மணித்துளிகள் முன்னதாகவே சென்றுவிட்டோம்.

நெருக்கடி இல்லாத சாலையினை நான் தேர்வு செய்து பயண நேரத்தை சுருக்கியது நண்பருக்கு வியப்பாக இருந்தது. எல்லாம் 'கூகுளாண்டவர் துணை" என்றேன். அந்த கூகுளாண்டவர் பற்றித்தான் தெரிந்து கொள்ளப் போகிறோம்.

மதுரைக்கு மட்டுமல்ல மாஸ்கோவிற்கும் வழி நம் கைகளிலேயே இருப்பதற்கான சாத்தியத்தினை தொழில் நுட்பம் நமக்கு அளித்திருக்கிறது.

நம்மிடம் உள்ள திறன் பேசியில் Google Map எனும் செயலி இயல்பாகவே பதிந்தே இருக்கிறது. இது பயணப்பொழுதில் எண்ணற்ற வகையில் நமக்கு உதவுகிறது.

அப்படிக் கூகுள் மேப்பில் என்னதான் இருக்கிறது? நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதாகட்டும், நீங்கள் எங்கே செல்லப்போகிறீர்கள் என்பதாகட்டும் மிக எளிதில் உங்களுக்கான வழித்தடத்தை இந்தச் செயலி சொல்லிவிடும்.




“வேலுருக்கு வழி என்ன என்று கேட்டால், வெள்ளைமாடு ஐம்பது ரூபாய் என்பான்” என்ற சொலவடை இன்றும் கிராமங்களில் உண்டு. ஆனால் வேலூரில் வெள்ளைமாடு மற்ற சந்தைகளைவிட ஐம்பது ரூ. குறைவாக கிடைக்கும் என்றால், அதுதானே சிறப்புத்தகவல்.

நாம் நடந்து செல்லவிருக்கிறோமா? அல்லது வாகனத்திலா என்பதை மட்டும் சொல்லிவிட்டால் போதும் எந்த வழியில் சென்றால் எவ்வளவு நேரத்தில் நீங்கள் செல்ல வேண்டிய இடத்தை அடையலாம் என்பதை நொடிப்பொழுதில் தந்துவிடும். அது மட்டுமா நீங்கள் செல்ல நினைக்கும் தடத்தில் போக்குவரத்து நெரிசல் இருந்தால் அதையும் முன் கூட்டியே உங்களுக்குத் தந்து, மாற்றுப்பாதையினையும் அமைத்து தரும்.

நாம் செல்லும் வழியெங்கும் உணவகங்கள், தங்கும் விடுதிகள், எரிபொருள் நிலையங்கள், வணிக வளாகங்கள் என மிகத்துல்லியமாக நமக்கு அடையாளம் காட்டும்.

எந்த ஒரு இடத்தினையும் நாம் தேர்வு செய்து குறியிட மட்டுமே நமக்கு இணையத்தின் துணை வேண்டும். தேர்வு செய்த பின்பாக இணைய இணைப்பினை துண்டித்துவிட்டால் கூட நாம் பயணிக்கும் இடத்தினை திரையில் தொடர்ந்து தெரிவிக்கும்.

உங்கள் வீடு, அலுவலகம் என உங்கள் இருப்பிடத்தை எளிதில் குறியிட்டு வைத்துக் கொள்ளலாம். ஊர்களின் பெயர்களைத் தமிழிலிலும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் வழித்துணையாக நீங்கள் இடப்புறம் வலப்புறம் என எத்திசையில் பயணிக்க வேண்டுமென்பதை முன் கூட்டியே ஒலி வடிவில் அறிவிப்பும் நமக்கு கிடைக்கும்.

செயலியினைத் தொடர்ந்து பயன்படுத்தும் போது சென்ற வாரம், சென்ற மாதம், சென்ற ஆண்டு நாம் எங்கே எப்போது பயணித்தோம் என்ற வரலாற்றையும் உங்கள் கணக்கில் சேமித்து வைக்கும். நமக்கு அருகில் இருக்கும் ஒவ்வோர் தெருவையும் ஒவ்வோர் சந்து பொந்துகளையும் நமக்கு அடையாளப் படுத்துகிறது இந்த செயலி. முக்கியமான இடங்களைப் படத்துடனும், தொலைபேசித் தொடர்பு எண்ணுடனும் நமக்குத் தெரிவிக்கிறது. தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி நமது வேலையினை எளிதாக்குவோம்.

இச்செயலி உங்கள் திறன்பேசியில் இயல்பாகவே (Default) ஆகவே இருக்கும். இல்லை எனில் Play Store சென்று Google map என தட்டச்சு செய்து தரவிறக்கம் செய்து கொள்ளுங்கள்.

இனிப் போவோமா ஊர்கோலம், பூலோகம் எங்கெங்கும்... ●

3ஆம் பக்க தொடர்ச்சி...

வாஜ்பேயி, அத்வானி, கல்யாண்சிங் என்று கூறியிருக்கிறார்.

மனிதநேயம் நொறுங்கி மதக்கலவரத்திற்கு இதுவும் கால்கோளாய் அமைந்தது.

2014ல் நரேந்திரமோடிபிரதமராகப் பொறுப்பேற்றதில் இருந்து நாடு சுடுகாடாக மாறுவதைப் போலத் தோற்றம் தருகிறது.

பசுவதை தடுப்பு, மாட்டிறைச்சி, சாதியம், சாதி மறுப்புத் திருமணம், சாதி மறுப்புப் பேசுவோர்கள் தாக்கப்படுவதும், நிர்வாணக் கோலத்தில் அடித்துத் துன்புறுத்தப்படுவதும், கொல்லப்படுவதும் சர்வ சாதாரணம் ஆகிவிட்டன.

சாதிக்கு எதிராகவோ, பார்ப்பனியத்திற்கு எதிராகவோ, மத்திய அரசுக்கு எதிராகவோ பேசுபவர்கள் குண்டர் சட்டத்தில் பலியிடப்படுகிறார்கள். மாணவர் வளர்மதியும் அப்படி ஆக்கப்பட்டவர்தான்.

282 நாடாளுமன்றப் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட பா.ஜ.க.வின் ஆளுமையில் ஏறத்தாழ 70 விழுக்காடு இந்திய நிலப்பரப்பு வந்துவிட்டது என்பது கசப்பான, ஆனால் வலிமையான உண்மை.

உத்திரப்பிரதேசத்தில் 70 குழந்தைகள் இறந்ததைப் பார்த்துக் கவலைப்படாத ராஜ் நாத்சிங், கேரளாவில் ஒரு பா.ஜ.க. தொண்டன் கொலை செய்யப்பட்டதற்குத் துடித்துப் போய் கூப்பாடுபோட்டாரே. கேரளத்தில் கலவரம் உண்டாகி அதன் மூலம் ஆட்சிக்குப் போகவேண்டும் என்ற நோக்கமா அது?

இப்பொழுது அமித்ஷாவுக்கு உறுத்திக் கொண்டு இருப்பது தமிழ்நாடு.

தமக்கு வாக்களிக்காத தமிழகத்தை 'வறட்டு' நிலமாக ஆக்க மோடியின் முயற்சி ஒரு பக்கம்; இருந்தாலும், அமித்ஷா பா.ஜ.கவை இங்கே நிலைநிறுத்தப் பார்க்கிறார் மறுபக்கம்.

இதுமுடியுமா? முடியாதா? முடியாது என்று சொல்லமுடியாது.

இது பெரியார் விதைத்த மண். அதனால் தான் பா.ஜ.காவைத் தடுத்துக் கொண்டு இருக்கிறது பெரியாரியம். ஆனால் பா.ஜ.க. தமிழகத்தில் நுழைந்துவிட்டது.

கன்னியாகுமரி, கோவை, திருப்பூர், சென்னை போன்ற பகுதிகளில் அதுகால் ஊன்றிவிட்டது. அதற்கு வாக்குகள் கணிசமாக கிடைக்கவில்லை இதுவரை. இனிமேல் அது பா.ஜ.க.வின் பிடியில் சிக்கியுள்ள அ.தி.மு.க.வின் மூலம் கிடைக்க சாத்தியம் ஏற்பட்டு உள்ளது.

தென் மாவட்டத்தில் கிருஷ்ணசாமியின் சாதியம், வடக்கில் பா.ம.க.வின் சாதியம்,மேற்கு மாவட்டங்களில் கொங்கு சாதியம் இவை பா.ஜ.க.விற்குப் பலம் சேர்க்க வாய்ப்பு இல்லை எனச் சொல்ல முடியாது. அதனால்தான் அமித்ஷா துணிச்சலாக வருகிறார்.

அனைத்துத் திராவிடக் கட்சிகள், இயக்கங்கள், இடதுசாரிகம்யூனிஸ்ட் கட்சிகள், இஸ்லாமியகட்சிகள், அமைப்புகள், தாழ்த்தப்பட்டோருக்கான முற்போக்கு அமைப்புகள் என்று பா.ஜ.க. எதிர்நிலையாளர்கள் எல்லாம் ஓரணியில் இதுவரை திரளவில்லை. தனித்தனியாகவே எதிர்ப்பை வெளிப்படுத்துகிறார்கள். தனிமரம் தோப்பாகாது, கரங்கள் இணைந்தால்தான் தோல்விகாணாது.

மக்களிடம் இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தாதது மிகப்பெரும் பலவீனம். காலம் கடந்தபின் கதறிப்பயனில்லை.

தாமரை இலக்கியங்களில் மலரட்டும், ஆட்சி அரசியலில் உதிரட்டும். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.